

கரும்புவில்லும் ஏந்தினாள் கவலை தீர்க்க ஆடினாள்
விரும்புகின்ற மொழியினாள் விண்ணையாழு விழியினாள்
பருவமாகி முகிலுமாகி பயிருமான விழியினாள்
ஜோதி ஜோதி ஆனநீ சுவர்ணவிஹாமாசினி.

அபிராமிப் பட்டர் அருளிய

# அபிராமி அந்தாதி

(கருத்துரையுடன் கூடியது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சிவசக்தி துணை



பொய்மை தீர்த்து புதுமை
சேர்க்கும் புன்னகையாள்
பொய்கை அமர்ந்த
மனோன்மணியாள் பாதம்
சமர்ப்பணமாவோம்.

எங்கும் நிறைந்த அன்னையே,
அன்புகொண்டருளும் தாயே, ஜோதி வடிவானவளே,
உன்னையும் உன் பெருமையையும் எண்ணாது மனம்போன
வழியில் சென்று அடிபட்டு மீண்டும் உன் பாதங்களே சமர்ப்பணம்
என்றடைந்தோம். நாம் செய்த பிழைகளிலிருந்தும், பிறர்
கதைகளை நம்பி அவர் கயமை வார்த்தைகளை
உண்மையென எண்ணி அடிபட்டுப்போன எமது
தவறுகளில் இருந்தும் எம்மைக் காக்க
வேண்டியது உனது கடமையே
ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஓம் சிவசக்தி துணை



## துர்க்காதேவி துதி

அருளோங்கு மானந்த வல்லினாள்
எண்வகை அறங்களை வளர்த்தசெல்வி
அயனாதி முப்பத்து முக்கோடி தேவர்நிதம்
அடிபரவு மிறைவி போத
பொருளோங்குமுயர் தவத்தோரருங்கதியை
பொருத வளிகாட்டும் அன்னையே
பொருளிலேன் தாய் தந்தை தமருதவி
தானிலேன் புவியிலொரு சுகமுமிலேன்
மருளோங்கி நிறைமனத்தேன் இகபரமான
வாழ்விலும் தாழ்வுறுவனோ
வந்து வந்தேபோன வாழ்வினால் நொந்து
உளம்வாடு மென்முகம் நோக்கியே
தெருளோங்கும் உயர்கல்வி செல்வமும்
தந்து உயர்தீர அருள் செய்அம்மணி
தெல்லிநகர் உழுகுடை பதியுறை நிறைசெய
செல்வி துர்க்கா தேவியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சிவசக்தி துணை

# பதிப்புரை

எல்லாம்வல்ல அன்னையின் வாசலில் 1999ம் ஆண்டு தேவார பதிகத்துடன் ஆரம்பிக்கப்பெற்ற இப்பணி இன்று அபிராமி அந்தாதியின் வரலாற்றுச்சுருக்கத்தோடு வெளியீடு செய்வதென்பது அன்னையின் அருட் கடாட்சத்தினால் எம்பணி வளர்ந்துள்ளது. ஒவ்வொரு பாட்டையும் பாடுவ தால் ஏற்படும் பலாபலன்கள் அவற்றின் பொருளோடு எழுதி வெளியிடக் கூடியவாறு ஊக்கமளித்த அனைத்து அடியவர்கட்கும் என் இதயம் கனிந்த நன்றிகள். பல்வேறு தனிப்பட்ட காரணங்களால் உடலும் உளமும் சோர்ந்து என்னுடைய கல்வியையே தொடரமுடியாது நிற்கும் இந்தவேளை யிலும் இரண்டு நாட்கள் மட்டும் செலவழித்து இப்பாடல்களுக்கு பொருள் எழுதக்கூடிய ஆற்றல்தந்த எல்லாம்வல்ல சிவசக்தியான வல்வை மாரியின் அருட்கடாட்சத்தை எண்ணாமல் இருக்க முடியாது.

எவராலும் அழிக்கமுடியாத எமது சமயத்தின் அற்புதங்களை வெளியிடுவதிலும், அவற்றைப் படிப்பதிலும் நாம் பெருமகிழ்வெய்த வேண் டும். அதற்கு நாம் கொடுத்து வைத்தவர்கள் என்றே சொல்லிக் கொள்ள வேண்டும். நடந்தவை, நடக்கப்போறவை பற்றி எல்லாம் எமது இந்து இலக்கியங்களில் கூறி இருக்கின்றன. – இதற்கு எடுத்துக்காட்டாக 'கந்தபுராணத்தின் தட்சகாண்டப் பகுதியில்' பிரளய காலத்தில் கடல் பொங்கி எழும் என்றும் அப்போது கடல்நீரின் கீழ்ப்பகுதியில் உள்ள மண் எம்கண்களுக்கு தெரியுமென்றும் அக்கடலின் வேகத்தை கண்ணன் குழந்தையாய் துயின்று அடக்கிக் காப்பான் என்றும் தக்ஷகனுக்கு ததீசி முனிவர் உரைத்ததாக கூறப்பட்டுள்ளதாக அறிகிறோமல்லவா. இதனை நேரில் கண்டும் உணர்ந்தும் இருக்கிறோம். அத்தகைய ஒருபெரும் சமய உண்மைகளை உணர்ந்த பின்னும் நாம் வேறு மார்க்கம் அலையும் எமது சமுதாயத்திற்கு இவற்றை எடுத்துரையாது இருப்போமானால் எமது பிறவி பயனற்றதான ஒன்றாகும்.

மேலைத்தேயவர் கீழைத்தேயங்கட்கு வரும்போது நாம் நிலத் துடனும் எமது சமயக் கொள்கைகளுடனும் இருக்க அவர்கள் பைபிள்க ளுடன் மட்டும் இருந்தார்கள், இன்று அவர்கள் நிலத்துடன் இருக்கிறார்கள். நாம் பைபிள்களுடன் இருக்கிறோம். இதனைக்கொண்டு வேறு சமயங் களை படிக்க வேண்டாம் என்பதோ அல்லது அதனை எதிருங்கள் என்பதோ எனது நோக்கமில்லை. ஆனால் உங்கள் தாய் தந்தையரைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று பிற தாய் தந்தையரையும் மதியுங்கள். ஆனால் உங்கள் தாய் தந்தையரைவிட்டு வெளியேறாதீர்கள். இதுவே எங்கள் கருத்துப் பிரயோகத்தின் நோக்கம்.

இன்று இவற்றைப் பாடுவதால் என்ன பயன் என்று கேட்கும் அடியவர்கள் பலரை நாம் காண முடிகிறது. அப்படிக் கேட்பவர்கள் நிட்சயம் ஒன்றைத் தெளியவேண்டும். நாம் பாடுவதால் பலனை எய்த முடியாது. உண்மை அன்போடும், நம்பிக்கையோடும், மெய்யடியவர்கள் காட்டிய வளியில் நின்று பாடினால் மட்டுமே அதன் பலனை எய்தமுடியும். இதனை உதாரணப்படுத்த வேண்டுமாயின் பக்கத்து வீட்டுப் பிள்ளை மூன்று பாடங்ளிலும் *A* எடுத்திருக்கிறது என்றால் மட்டும் போதாது. அது எப்படி *A* எடுக்க முடிந்தது என்றும் சிந்திக்க வேண்டும். அதே போன்றுதான் பேரின்பக் கடலான இறைவழிபாடும்.

அனைத்து துறைகளின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் கலைகளின் சிறப்பிற்கும் இருப்பிடமான எமது இந்துமதம் இன்றைய வர்த்தக கல்வி பயிலல். பயிற்றுவித்தல் முறைகளால் உண்மைப் பொருளை அறியமுடியாது. வெளிப்பொருளுடன். சில சந்தர்ப்பங்களில் பொருளே இல்லாத கல்வி முறையுடன் தங்கிவிடுகின்றமை கவலைக்குரிய ஒன்றே.

இங்கும் அபிராமி அந்தாதியின் வெளிப்பொருள் மட்டுமே பெரும்பாலும் எழுதப்பட்டிருக்கிறது. உதாரணமாக முதலாவது பாட்டில் உள்ள 'மாதுளம் போது' என்ற சொல்லை எடுத்தால் மாதுளம் பூ போன்று என்ற வெளிப்பொருளை அதுதரும். அதனை சற்று உள்ளேசென்று பார்ப்போமாயின் (மாது – பெண்) (உளம் – உள்ளம்) (போது – போன்ற) பெண்களின் உள்ளம்போன்ற மென்மையானவள் என்பது வெளிப்படும். இதேபோன்று எல்லா பாடல்களிலும் உட்பொருள் செறிந்துள்ளது. எனவே மந்திரங்கட்கு சமவலிமை வாய்ந்த தமிழ்வேதம் என்று சொல்லப்படுகின்ற தேவார திருவாசகங்களையும் அபிராமி அந்தாதி. அபிராமி அம்மை பதிகம் என்பவற்றையும் அவற்றின் பொருளை உணர்ந்து சொல்லி உய்வோமாக.

~ ***அம்பாள் அடியவன்***

## அபிராமி அந்தாதி எனப்பட காரணமும் சிறப்பும்

அந்தம் என்பது முடிபு என பொருள்படும். அதேபோல ஆதி என்பது தொடக்கம் என பொருள்படும் இங்கு அபிராமி அம்மைமேலே பாடல் ஒன்றின் முடிபு அடுத்த பாடலின் தொடக்கமாக அமைவதனால் அபிராமி அந்தாதி எனப்பட்டது.இப்பாடலில் உதிக்கின்ற என்று தொடங்கி உதிக்கின்ற என்று நிறைவு பெறுகின்றமையும். ஒரு பாடல் பல உட்பொருட்களை கொண்டுள்ளமையும் அம்மையாலேயே விரும்பி ஆட்கொள்ளப்பட்ட வரலாற்றுச் சிறப்பும் இப்பாடல்களின் சிறப்பேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவசக்தி துணை

# அபிராமிப் பட்டர் வரலாற்றுச் சுருக்கம்

**'காலனை சாய்த்த மருந்து தேவர்காணும் கனாவிலும் காணா மருந்து'**

என்று வள்ளலார் போற்றும் திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர் காலனை உதைத்த கோலத்தோடு காட்சிதரும் திருத்தலத் திற்கருகே அமிர்தலிங்கர் என்ற இயற்பெயர் கொண்ட அபிராமிப் பட்டர் அபிராமி அன்னைக்கு பூஜை ஆற்றி வந்தார். இவர் தஞ்சை மன்னன் காலத்தில் பஞ்சாங்கம் பார்க்கும் பணியை அரச அவையில் மேற்கொண்டிருந்தார்.

ஒருநாள் அபிராமி தேவிக்கு பூஜை முடித்து நிஷ்டையில் அமிர்தலிங்கர் அமர்ந்த வேளை அபிராமி தேவியை வணங்க தஞ்சை மன்னன் சரஜீபோஜி வந்தான். அங்கே குழுமி இருந்த பொறாமை கொண்ட கும்பல் அமிர்தலிங்கருக்கு பித்து என்றும், பெண் பயித்தியக்காரர் என்றும் பெண்களை தெய்வமாக கண்ட அமிர்தலிங்கற்கு பட்டம் கொடுத்து, அது மன்னன் காதுகளிலும் விழும்படி சொல்லினர். அங்கு வந்த மன்னனும் சோதிக்கும் பொருட்டு இன்று அமாவாசை 'எத்தனை நாளிகை' என்று வினவ நிஷ்டையில் இருந்த பட்டர் இன்று முழு பூரணை ஆயிற்றே என்று பதிலளித்தார்.

முன்பே பித்தர் என்று கயவரால் சூட்டப்பட்ட பட்டரின் நிலை கண்டு மன்னன் திகைத்து பஞ்சாங்கம் பார்க்கும் பணியில் நிற்கும் இவர் இப்படியான ஒரு சூழலுக்கு மாறியமை வெறுப்பளித்தது. இன்று முழு பூரணை வரவில்லை என்றால் உனக்கு சிரச்சேதம் செய்வேன் என்று எச்சரித்துச் சென்றான்.

தியாணம் கலைந்ததும் உண்மைகளை அறிந்துகொண்ட அமிர்தலிங்கர் பெரும் கவலை கொண்டார். குற்ற உணர்வால் வாடினார். ஆயினும் அன்னையின் ஒளியில் அமாவாசை என்பதற்கிட மில்லை என்று உணர்ந்து பொய்யும் மெய்யும் இயம்ப வைப்பவர் அவளே என்று தேறினார். எனினும் என்னைப் பொய்யுரைக்க வைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்னையே மெய்யும் உரைப்பாள். இல்லையேல் நான் தீக்குளித்து இறப்பேன் என்று உறுதிகொண்டார். இதனால் அக்கினிக் குண்டம் அமைத்து அதன்மேலே நூறு இளைகொண்ட உறி அமைத்து ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ஒவ்வொரு இளையாக வெட்டிவந்தார்.

அதிசயம் 79வது பாடலில் (விழிக்கே அருளுண்டு) இந்த மானிட கயமைகளோடு இனி என்ன கூட்டு என்று பந்தபாசங்களை விட்டெறிந்த போது அன்னை தனது தாடங்கமென்ற தோட்டை அறுத்து வானவீதியிலே பூரண சந்திரனாக பறக்கவிட்டாள் என்பது வரலாறாகும்.

இந்த வரலாற்றுச் சுருக்கத்தை உணரும்படியாக கடந்த தை அமாவாசை தினத்தன்று அபிராமிப் பட்டர் விழா வல்வை மாரியாள் அருளால் அங்கே ஆரம்பிக்கப்பெற்றமை பெருமகிழ்சிக் குரியது மட்டுமன்று, அடியவர்கட்கு பெரும் பயனுமளிப்பதே. இத்தகைய பெருமதிப்பளிக்கும் இவ்வரலாற்றை ஏனைய அடிய வர்களின் உதவியுடன் இலவசமாக அச்சிட்டு வழங்குவதன் நோக்கம் பெரும் பயனை நம் சமூகம் அடையவேண்டுமென்பதே. எனவே தயவுசெய்து இப் புத்தகத்தை பயன்படுத்த விரும்பாத அன்பர்கள் ஏனைய அடியவர்களிடம் கொடுத்து உதவவும்.

இப்பணியில் தன்னையும் இணைத்து உள்ளீட்டு செலவை மட்டும் பெற்று மிகவும் சிறப்பாக அச்சேற்றி உதவிய உடுப்பிட்டி – இலக்கணாவத்தை ஸ்ரீவாணி அச்சகத்தினருக்கு எமது நன்றி களும் அன்னையின் ஆசிகளும் உரித்தாகட்டும்.

**- அம்பாள் அடியவன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சிவசக்தி துணை

## மெய்யடியார்களே!

ஏறக்குறைய 32,000 ரூபா வரை செலவாகும் என்று கருதப்பட்ட இப்பணியை ஸ்ரீவாணி அச்சக உரிமையாளர் உற்பத்தி செலவை (19,000/-) மட்டும் தாருங்கள் என்று கூறி, இப்பணியை முழுமையாக தற்சமயம் தன்னால் பொறுப்பேற்க முடியவில்லை என்றும், இனிவரும் காலங்களில் இதனையும்விட குறுகிய செலவில் இறைபணிக்கு ஒத்துழைப்பதாகவும் கூறியுள்ளமை மகிழ்ச்சிக்குரியதும் பாராட்டுக்குரியதுமான ஒன்றாகும். அடியேனின் முயற்சியை வியந்தது மட்டுமல்லாமல், தனிப்பட்ட ஒரு நபரில் தாங்குதல் ஏற்படக்கூடாது என்ற கொள்கையுடைய இவ் அடியவர், எமது இறைபணிக்கு ஒத்துழைத்தமைக்காக எங்கள் அனைவரது ஒருமித்த நன்றியறிதலை தெரிவிப்போமாக.

இப்பிரதிகள் எல்லா அம்பிகை அடியவர்கட்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக இலவசமாக வழங்கப்படுகிறது. எல்லோரும் உணரும் வகையில் இயன்றவரை இலகுதமிழில் பொருளாக்கம் செய்யப்பெற்றுள்ளது. உட்பொருளை உணரவேணடும் என்ற உந்துதல் உடைய அடியவர்களும் - தமது கருத்துரைகளை வழங்க விரும்பும் அடியவர்களும் நேரில் சந்தித்து வழங்கலாம். தரமான கருத்துக்கள் அடுத்த மலரோடு (நூல் பிரதியாக) வெளியிடப்பெறும்.

இக்கலியுகத்தில் நாம் காண்பதெல்லாம் ஒரே கயமைகளுமாகவும், எதிர்கால சந்ததியினரின் செயற்பாடுகளைப் பார்க்கும்போது கடவுளுக்குப் பயந்து வாழுகின்ற மனசாட்சி, எமது தமிழ்ப் பண்பாடு முதலானவை எல்லாம் எமது சமயநெறி நின்று ஒழுகல் குன்றியமைக்கான தன்மைகள் தெரிகின்றன. மெல்லமெல்லவேனும் எமது சமய விழுமியங்களை, அற்புதங்களை தெரியப்படுத்த வேண்டும் என்ற அவாவில் உந்துதலில் இப்பணியை ஆற்ற விழைகின்றோம்.

சிறப்பாக இப்பணியை நகர்த்த இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு குழுவை அமைப்பதும் விருப்பத்திற்குரியதே. தனிநபர் ஒருவர் எல்லா அடியவர் பொருட்டும் வெளியீடு செய்யும் இப்பணியில் பல அடியவர்கள் பல்வேறு வழிகளிலும் ஊக்கம் நல்கினர். இவ்வகையில் ஒருகுழுவை அமைத்து இப்பணியை தொடர்ந்து நகர்த்துவதும் - இயன்ற வரை விரிவுபடுத்துவதும் இந்துக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

வி. சுமதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சிவசக்தி துணை



*அபிராமிப்பட்டர் அருளிய*

## <u>அபிராமி அந்தாதி</u>

### காப்பு

**தாமரர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை**
**ஊரார்தம் பாகத்து உமைமைந்தனே உலகேழும் பெற்ற**
**சீரபிராம் அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே**
**காரமர் மேனிக் கணபதியே நிற்கக் கட்டுரையே.**

கொன்றை மாலையையும் சண்பக மாலையையும் அணிந்த தில்லை நடராஜப் பெருமானின் இடப்பாகத்து வீற்றிருக்கும் சிவகாமசுந்தரியின் திருக் குமாரரே! கணங்கட்கு அதிபதியே! இடையறாது அபிராமி அந்தாதியின் பொருள் என் நாவில் படர அருள்வீராக.

### நூல் :

### <u>ஞானமும் நல் வித்தையும் பெற</u>

**உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்**
**மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போதும் மலர்க்கமலம்**
**துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமத் தோயமென்ன**
**விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.** 1

உதயசூரியனின் கதிர்போலவும், மஞ்சாடி மலர் நிறைந்த தலையிலே அழகிய நெற்றிப்பொட்டும் உடைய மென்மையான உளம்கொண்டு (மாதுளம் பூ போன்று) உயர் நூலுணர்வு உடையவரால் போற்றவும் குங்கும குழம்பு போன்ற செந்நிற மேனி உடையவளும் மகாலக்சுமியும் வணங்கும் சிறப்பு பெற்றவளுமான அபிராமித்தேவியே மேலான துணையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிந்தவர் ஒன்று சேர

துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்ட வேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கரும்புச் சிலையுமென் பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவ அறிந்தனமே. 2

கரும்பு, வில், பாசாங்குசம் ஆகியவற்றை திருக்கரத்தில் தாங்கி திரிபுர சுந்தரியே! வேதங்களின் தாயாகவும், பெற்ற தாயாகவும் எமக்கு துணை நிற்பாள் என்பதனை அறிந்துகொண்டோம்.

## குடும்பக் கவலையிலிருந்து விடுபட

அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்து கொண்டு
செறிந்தேன் உனது திருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின் அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே. 3

மேலான தாயே! எவரும் எளிமையாக அறியமுடியாத மறைநூல்களை (வேதம் முதலான) உன்னால் அறிந்துகொண்டு உன்னுடைய திருவடிக்கே படர்ந்தேன். உனது பெருமைகளை எண்ணாது நரககுளியில் அமிழ்ந்துபோகும் கயவர்கள் தொடர்பையும் நீக்கிக்கொண்டேன்.

## உயர் பதவிகளை அடைய

மனிதரும் தேவரும் மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என் புந்தி என்நாளும் பொருந்துகவே. 4

மனிதர்களும் மேலான தேவர்களும் மறுபக்கமில்ல முனிவர்களும் உன்னழகு கோலம்கண்டு திருவடியை வணங்கும் அபிராமி அன்னையே! குளிர்நிலவும், பாம்பினையும், தேவகங்கா நதியினையும் தலையில் உடைய சிவனும், நீயும் எந்நாளும் தியான பொருளாக இருப்பீர்களாக.

## மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும் புணர் முலையாள்
வருந்திய வஞ்சி மருங்குல மனோன்மணி வார்சடைமேல்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம் என்சென்னியதே. 5

மூவகை ஆன்மாக்களிலும் நிறைந்து சக்தியும் பரந்த முலை பாரத்தால் அசையும் கொடிபோன்று அசையும் இடையும் உடைய மனோன்மணி தேவி சடாமுடி உடைய சிவன் உண்ட நஞ்சை அமுதாக்கிய அழகிய புயங்களை உடைய தாயின் பாத கமலங்கள் என் சிரசில் பதிந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மந்திர சித்தி பெற

**சென்னியது உன் பொன்திருவடித்தாமரை சிந்தையுள்ளே**
**மன்னியது உன் திருமந்திரம் சிந்துர வண்ணப்பெண்ணே**
**முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே**
**பண்ணியது என்றும் உன்றன் பரமாகம பத்ததியே. 6**

அபிராமித்தாயே! உன்னுடைய திருவடிகளே எனது மாலை ஆகும். என்னுடைய சிந்தனை, தியானம் உன் மூல மந்திரமாகும். உன்னுடைய அடியாரோடு கூடி உன் ஆகம பத்ததியை படித்து உணர்ந்துள்ளேன்.

### மலையென வரும் துன்பம் பனியென நீங்க

**ததியுறு மத்திற் சுழலும் என் ஆவிதளர் விலதோர்**
**கதியுறு வண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்**
**மதியுறு வேணி மகிழ்நனும்மாலும் வணங்கியென்றும்**
**துதியுறு சேவடியாய் சிந்துரானன சுந்தரியே. 7**

தாமரை மலர் உறையும் பிரமாவும், சந்திரனை சடையில் தரித்த சிவனும், திருமாலும் வணங்கும் சிவந்த பாதங்களை உடைய தாயே! அழகிய பொட்டை உடையவளே! மத்து போன்ற பிறப்பாலும் இறப்பாலும் சுழன்று கொண்டிருக்கும் எனது உயிர் நிலையான சிவகதி அடைய அருள்பாலிப்பீராக.

### பற்றுகள் நீங்கி பக்தி பெருகிட

**சுந்தரி எந்தை துணைவி என் பாசத்தொடரை யெல்லாம்**
**வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்**
**அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்**
**கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே. 8**

அழகிய பொட்டினை உடையவளும், எமது தந்தையாகிய சிவனின் துணைவியாரும், என்னுடைய பாசவினைகளை எல்லாம் அறுத்தவளுமான அபிராமி தேவியாகிய அழிவில்லா கன்னிகையான தாயின் தாமரை போன்ற பாதங்கள் என் கருத்தில் நிறைந்திருப்பதாக.

### அனைத்தும் வசமாக

**கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்**
**பெருத்தன பால் அழும் பிள்ளைக்கு நல்கின பேரருள்கூர்**
**திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச் சிலையும் அம்பும்**
**முருத்தன மூரலும் நீயும் அம்மே வந்தென் முன் நிற்கவே. 9**

சிவனின் கண்ணில் பட்டு ஒளிர்வனவும் அழகிய மலை போன்று பெருத்தனவும், அமுதஞான குழந்தைக்கு பால் கொடுத்தனவும் முத்து மாலையை தரித்தனவுமான திருமுலை உடைய அபிராமி அம்மையே! சிவந்த கரங்களில் கரும்பு வில்லும், அம்புகளும், வெந் ஒளி வீசும் புன்னகையுமாக எழுந்துவந்து அடியேனுக்கு காட்சி தருவீராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்ச சாதனம் பெற

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுனை
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதாமரையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே. 10

எழுத்திலே எழுதப்படாத வேதங்களின் முதற்பொருளாய் நிற்பவளே! காட்சிக்கு அரும்பொருளான சிவசக்தியே! உமை அம்மையே! பார்வதியாக பிறந்தவளே! அடியேன் நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் வழிபடுவது உன் திருவடிகளையே ஆகும்.

## இல்வாழ்க்கையில் இன்பம் பெற

ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்த மான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்த மான சரணாரவிந்தத் தவளநிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக்கண்ணியதே. 11

எனக்கு ஆனந்தமாகவும், அறிவொளியாகவும், அமுதமாகவும் நிறைந்து விளங்கும் நான்மறைகட்கும் முடிவாக இருக்கின்ற தாமரை மலர் போன்ற அழகுடைய திருவடிகள் திருவெண்காட்டு நடனசாலையாம் திருக்கடவூரில் எழுந்தருளி இருக்கும் அமிர்தகடேஸ்வரரின் முடியிலே இருக்கிறது.

## தியானத்தில் நிலைபெற

கண்ணியதுன்புகழ் கற்பதுன் நாமம் கசிந்து பத்தி
பண்ணியதுன் இரு பாதாம்புயத்தில் பகல் இரவா
நண்ணிய துண்னை நயந்தே அவயத்து நான் முன்செய்த
புண்ணியம் எது என் அம்மே புவி ஏழையும் பூத்தவளே. 12

ஏழு உலகங்கட்கும் அதிபதியாய்நிற்கும் என்தாயே! அடியேன் சிந்தித்துஉரைப்பது உன்னுடைய புகழ் நாமமாகும். கற்பது உன்னுடைய திருநாமம். பக்திசெய்வது உன்னுடைய அழகிய திருவடிகட்கே. பகல் இரவாக நட்புபூண்டது உன்னடியவர் திருக்கூட்டத்தையே. இதற்குநான் முற்பிறவியில் என்ன தவத்தை செய்தேனோ?

## வைராக்கியம் நிலை எய்த

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தர்க்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே. 13

பதினான்கு உலகங்களையும் படைத்து காத்தவளே! பின்ப அவை ஒடுங்குவதற்கு காரணமானவளே! சதாசிவனுக்கு மூத்தவளே! திருமாலுக்கு இளையவளே! பெருந்தவத்திற்கு உரியவளே! உன்னை அல்லாது பிறிதோர் தெய்வத்தை வணங்குவதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமை பெற

வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நல் திசைமுகவர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே. 14

எம்பிராட்டியே! தேவரீரைத் திரிகரண சுத்தியால் வழிபடுபவர் தேவரும் அசுரருமான இருநிறத்தவராவார். நின்னை அருவடிவாய் மனதினால் தியானிப்பவர் பிரமாவும் விஷ்னுவுமே. தூய மனக்கயிற்றால் பிணிப்பர் அழிவில் சிவானந்தப் பேறுடைய சிவயோகிகளே. எனினும் ஆலயங்களில் உன்னைக் கண்டு வழிபடுபவர்கட்கு திருவருட்பேறு எளிதானதே.

## பெருஞ் செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக்கென்று முன்னே பலகோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார் மதிவானவர்தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியாமுத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொல் பரிமள யாமளைப் பைங்கிளியே. 15

பண்ணிசை தந்தருளும் அபிராமித்தாயே! அழகிய வாசனை தருபவளே உன்னை முற்பிறப்பிலே நாடித் தவங்கள் செய்துகொண்டவர்கள் இப்பிறப்பில் பொருட்செல்வத்தை மட்டுமா பெறுவர்? இல்லை சகல சௌபாக்கியங்களையும் பெறுவர்

## முக்காலமும் உணரும் திறன் உண்டாக

கிளியே இளைஞர் மனத்தே கிடந்து கிளிர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதல் பூதங்களாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவளவிற்கு அளவானது அதிசயமே. 16

அபிராமித்தாயே! நின் அன்பர் உள்ளத்து நின்று ஒளியாகத் தோற்றும் ஞானப்பெருக்கே, அந்த ஞான ஊற்றுக்கு இருப்பிடமானவளே, அனைத்தையும் கடந்துநிற்கும் பரமானந்த பூதங்களின் அறிவொளியாக விரிந்தவளே, சிற்றறிவு உடைய உன்அடியான் உள்ளத்தில் பேரொளியாகத் திகழ்வது அதிசயமானதே.

## கன்னிகைகளுக்கு நல்ல வரன் அமைய

அதிசயங்கள் வடிவுடையான் அரவிந்தமெல்லாம்
துதிசெய ஆனை சுந்தரவல்லி துணை இரதி
பதிசயமானது அபசயமாக முன் பார்த்தவர் தம்
மதிசயமாகவன்றோ வாம பாகத்தை வவ்வியதே. 17

அற்புதமான வடிவுடையவள், இப்பூமியெல்லாம் துதிக்கப்பெறும் அழகி இரதியின் துணைவனான மன்மதனை எரித்த சிவனின் இடப்பாகத்து அமர்ந்து இருப்பது அவனது அறிவை வெல்வதற்கன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மரண பயம் நீங்க

வவ்விய பாகத்து இறையரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ள
அவ்வியம் தீர்த்தெனை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் வரும் போது வெளிநிற்கவே. 18

குற்றமற்ற சிவனும் அவரது இடப்பாகத்தே நீரும் மகிழ்ச்சியோடு இருக்கும் செம்மைத் தன்மையும் உங்கள் திருமணக் காட்சியும் என் மனதில் நிற்க, குற்றம் நீக்கி என்னைக் காத்தருளிய திருப்பொற்பாதத்தில் வந்து கொடியயமன் என்னுயிர் கவரவரும்போது நீவிர் வெளிப்பட்டு தோன்றவேண்டும்.

### பேரின்ப நிலையடைய

வெளிநின்ற நின்திரு மேனியைப்பார்த்தென் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லைக்கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றதென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பது மேவி உறைபவளே. 19

ஒளிவீசும் நவகோணங்களிலும் நின்று ஒளிர்பவளே! தியாணநிலை வெளிப்படும் உன்னொளியும் என் கண்ணுள்ளே நின்றுதோன்றும் உன் திரு உருவமும் ஓர் எல்லையற்ற ஆனந்த பெருக்காகும். ஆயினும் தெளிவான ஞானஊற்று என்னிடம் வந்து பொருந்தியது என்ன திருவுளமோ அறியேன்.

### வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

உறைகின்ற நின்திருக்கோயிலில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண் திங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமே
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே. 20

பூரண பொருளான அபிராமி தேவியே! உன் கோவிலில் உன் கணவர் ஒருபாகமோ? ஒலிக்கின்ற வேதங்களின் முதலோ, முடிவோ? அமுதம் சொரியும் பால் நிலவோ, மறைகின்ற பாற்கடலோ? என் நெஞ்சத்திடமோ அறியேன்.

### அம்பிகையை வழிபடாமல் இருந்த பாவம் தொலைய

மங்கலை வெங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கைச் சகலகலா மயில்தாவு கங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலி செய்யாள் வெளியாள் பசும் பெண் கொடியே. 21

பசுமையான கொடிபோன்ற இடையை உடைய அபிராமித் தேவியே! நித்திய சுமங்கலையும், சிவந்த மாணிக்க கலசம் போன்ற முலையை உடைய வரும் வெண்சங்கு வளையல் அணிந்தவரும் சகல கலைகட்கும் அதிபதி ஆனவரும் அழகிய மயில் போன்றவரும் பொங்கும் கங்கையை சிவனின் இடப் பாகத்தில் தரித்தவரும், என்னை அடிமையாக உடையவருமாகிய அன்னை பொன், நீலம், செம்மை,வெண்மை ஆகிய நிறங்களையும் உடையவளாவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இனிப் பிறவா நெறி அடைய

**கொடியே இளவஞ்சிக் கொம்பே எனக்கு வம்பே பழுத்த**
**படியே மறையின் பரிமளமே இமயப்**
**பிடியே பிரம்மன் முதலாய தேவரைப்பெற்ற அம்மே**
**அடியேன் இறந்திங்கு இனிப்பிறவாமல் வந்து ஆண்டுகொள்ளே.** 22

கொடியானவளே! பொற் கொம்பானவளே! அறிவில் பக்குவப்படாத எனக்கு பக்குவப்பட்ட பழுத்த கனியாக வாய்க்கப்பெற்றவளே, வேதவாசனையே சிவகளிறு தழுவும் இமையபிடியே! பிரமாதிதேவர்களைப் பெற்ற அபிராமிதேவியே! அடியேன் இங்கு இறந்து இனிப் பிறவாவண்ணம் ஆண்டுகொள்ளே.

### எப்போதும் மகிழ்ச்சியாய் இருக்க

**கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லாதன்பர் கூட்டந்தன்னை**
**விள்ளேன் பரசமயம் விரும் பேன்மூவுலகுக்கு**
**உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளதே விளைந்த**
**கள்ளே களிக்கும் களியே அளிய என் கண்மணியே.** 23

மூன்று உலகங்கட்கும் உட்பட்டும் அப்பாற்பட்டும் நிற்கும்தாயே! உள்ளத்தை மயக்கும் இனிய தேனே! பிறிதொன்றையும் என் மனதாலே நினையேன். உன் அன்பர் கூட்டத்தைப் பிரியேன். என்மனத்தில் ஆனந்தம் களிக்கும் அபிராமியின் சமயமன்றி பிறிதொரு சமயத்தையும் விரும்பிப் போகமாட்டேன்.

### நோய்கள் விலக

**மணியே மணியில் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த**
**அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்**
**பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே**
**பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே.** 24

மணியாகவும், அவ்மணி இடத்தே விளங்கும் ஒளியாகவும், மாணிக்க ஆபரணம் போன்றவரும், அவ் ஆபரணங்கட்கு அழகாயும் இருக்கும் அபிராமித் தேவியே! உன்னை அடையாதவர்க்கு நோயாகவும், நின் பாதத்தை அடைந்தவர்க்கு அந்நோயைப் போக்கும் மருந்தாகவும் விளங்கும் நின் பாதங்களை பணிவதன்றி வேறொரு தெய்வத்தை வணங்கேன்.

### நினைத்த காரியம் நிறைவேற

**பின்னே திரிந்துன் அடியாரைப்பேணிப் பிறப்பறுக்க**
**முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்**
**அன்னே உலகுக்கும் அபிராமி என்னும் அருமருந்தே**
**என்னே இனியுன்னை யான்மறவாமல் நின்று ஏத்துவனே.** 25

பிரம்மா, சிவன், விஷ்னுவாகிய மும்மூர்த்திகட்கும் தாயாக விளங்கும் அபிராமித்தேவியே! உலகிற்கு அபிராமி என்ற பெயருடன் அருமருந்தாக இருப்பவளே! உன்னடியவர்கள் பின்னே சென்று அவர்களை அன்புசெய்து இந்தப் பிறவிப்பிணியைப் போக்கமுன்னம் பலதவங்களை செய்துகொள்ள முயற்சித்தேன் இனி உன்பாதங்களை ஏத்தி என்றும்மறவாமல் நின்று வழிபடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வாக்கும் சொல்வாக்கும் பெருக

ஏத்தும் அடியவர் ஈரேழுலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ்பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே மணம்நாறும் நின்தாளிணைக் கொன்
நாத்தங்கு புன்மொழி ஏற்றியவாறு நகையுடைத்தே. 26

கடப்பமலர் சூடும் அபிராமி தேவியே! இப்பதினான்கு உலகையும் படைத்து, காத்து, அழித்து பரிபாலிப்பவர்கள் நின் அடியவர்களாகிய மும்மூர்த்திகளும் வணங்கும் நின் நறுமணம் வீசும் பாதங்கட்கு என்நாவிருந்து வரும் இப்பாமாலையானது உன் திருச்செவிகட்கு நகைப்பிற்குரிய ஒன்றே!

## மனநோய் அகல

உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்ம பதயுகம் சூடும் பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்தலுக்கையெல்லாம் நின் அருட்புனலாய்
துடைத்தனை சுந்தரி நிஅருள் ஏதென்று சொல்லுவதே. 27

பேரழகியே! உன்னுடைய திருவடிகளை என் சிரசில் சூடி அருளினாய். இதனால் என் மனமாசுக்கள் நின் கருணைவெள்ளத்தினால் முற்றாக நீங்கியது. என் பிறவிப்பிணிகளையும் போக்கி உன்மேலே அன்புவைக்கப் பணித்த உன் அருட்கடலை எவ்வாறு சொல்லுவேன்.

## இம்மை மறுமை இன்பங்கள் அடைய

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப்பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுது அவர்க்கே அளியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே. 28

திருநடணம் செய்யும் சிவபிரானுடன் சொல்லாகவும் சொல்லின் பொருளாகவும் கலந்துநிற்கும் வாசனைபொருந்திய மலர்போன்ற இளம் கொடிஇடையாளே! நின்னுடைய பாதங்களைப் பணிபவர்க்கு அழிவற்ற அரசாட்சியும், தவஒழுக்கமும், சிவலோகபதவியுமாகிய மூன்றும் ஒருங்கே கிடைக்கும்.

## எல்லாச் சித்திகளும் அடைய

சித்தியும் சித்திதரும் தெய்வமுமாகித் திகழும் பரா
சக்தியும் சக்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புறக்கும் புறத்தையன்றே. 29

அட்டமாசித்திகளும் அச்சித்திகளைத்தரும் பராசக்தியாகவும் அச்சக்தியை விளைவிக்கும் சிவமாகவும் தவம்செய்பவர்கள் பெற்றுக்கொள்ளும் பரமுத்தியாகவும், பரமுத்திக்கு வழிகாட்டும் ஆதாரசக்தியாகவும், ஆத்மாவினுள்ளே நின்று ஒளிரும் அறிவாகவும் விளங்குபவர் அபிராமித்தாய் ஒருவரே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்து ஏற்படாமல் இருக்க

அன்றே தடுத்தென்னை ஆட்கொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கினி நான் என் செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே பல உருவே யருவே என் உமையவளே. 30

அருவமும், உருவமும், அருவுருவமுமாகி, ஒன்றாகவும், பலவாகவும், அண்ட வெளியாகவும் திகழும் அபிராமிதேவியே! அன்றே என்னை தடுத்தாட் கொண்ட நீ இன்று என்னை கைவிடுதல் சிறந்தவொன்றல்ல! நானாக மாறிசென்றாலும் இனிஎன்னை முத்திக்கடலில் செலுத்துதல் தேவரீரின் திருவருள் பாங்கேயாம்.

## மறுமையில் இன்பம் உண்டாக

உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்ய வைத்தார் இனி எண்ணுதற்கு
சமயங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர் மேல் வைத்த ஆசையுமே. 31

(கனவுநிலையில்) உமையும் உமைபாகம்கொண்ட சிவனும் ஒரேநேரத்தில் இங்கு எழுந்தருளி என்னையும் தமக்கு அன்புசெய்யுமாறு அருள்பாலித்தருளி னர். இதனை ஆராய பிறிதோர் சமயங்களும் இல்லை. என்னைப் பெற்றெடுப்ப தற்கு இனி ஒரு தாயுமில்லை. மென்மையான தோள்களையுடைய மாதர் மேல் வைத்த ஆசையும் இனி இல்லாது ஒழிவதாக.

## துர் மரணம் வராமல் இருக்க

ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகனைப்
பாசத்தில் அல்லல் பட இருந்தேனை நின்பாதமென்னும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேத்தை என் சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே. 32

இறைவனின் வாம பாகத்திருக்கும் அன்னையே! விருப்பு வெறுப்புக்கட்கு உட்பட்டு இரக்கமற்ற கூற்றுவன் வலையில் சிக்குண்டு துன்பப்பட இருந்த என்னை வலியவந்து நின் திருப்பாதங்களை என் சிரசில் வைத்து ஆட்கொண்ட உன் திருவருளை எவ்வாறு போற்றித் துதிப்பேன்.

## இறக்கும் நிலையிலும் அம்பிகை நினைவோடு இருக்க

இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும் பொழுதுவந்து அஞ்சல் என்பாய் அத்தர் சித்தமெலாம்
குழைக்கும் களபக்குவிமுலை யாமளைக் கோளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே

இறைவன் பாகத்தை இருப்பிடமாகக் கொண்டு அவரையே உருகச்செய்யும் அபிராமிதேவியே! என்னுடைய நல்வினை தீவினைகட்கு ஏற்ப என்னுயிர் கதி கலங்க எடுக்கவரும் யமனைக் காணும்வேளை அம்மையேயென்று நானழைக்க ஓடிவந்து அஞ்சாதே என்றுகூறி காப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த நன் செய்நிலங்கள் கிடைக்க

வந்தே சரணம் புகும் அடியாருக்கு வானுலகம்
தந்தே பரிவோடு தான் போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே. 34

தன்னை நம்பிவந்த அடியவர்கட்கு சுவர்க்கம் முதலான பதவிகளை கொடுக்கும் அபிராமி தேவியே! பிரமாவின் நாவிலும், விஷ்ணுவின் திருமார்பிலும், சிவனது இடப்பாகத்திலும் சூரிய சந்திர மண்டலங்களிலும் எழுந்தருளி இருப்பர்.

## திருமணம் நிறைவேற

திங்கள் பகலின் மணநாறுஞ் சீறடி சென்னி வைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவமெய்துமோர் தரங்கடலுள்
வெங்கட் பணியனை மேல்துயில் கூறும்விழுப் பொருளே. 35

திருப்பாற் கடலில் துயிலும் திருமாலின் ஆனந்தயோகத்தில் துயிலும் அபிராமி தேவியே! ஒருகலையாகிய சந்திரமணம் கமழும் உன் சிறியபாதங்களை எனது சிரசிலேவைத்தருளி மானிடராகிய நாமும் உனைவணங்கும் அருட்பேறு தந்துத வினாய். எல்லையற்ற இத்தேவர்கட்கும் இவ்யோகப்பேறுகிடைக்குமோ?(இல்லை)

## பழைய வினைகள் வலிமை அழிய

பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருளேது மின்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே. 36

மென்மையான தோள்கைளை உடைய அபிராமி தேவியே! பொருளாகவும், அப்பொருளால் விளையும் போக பொருளாகவும், அக் கிடைத்தற்கரிய போகத்தால் பெறப்படும் மயக்கமாகவும், அம் மயக்கத்தில் உண்டாகும் இருள் நிலையாகவும் விளங்கும் நீ என்னுடைய உள்ளத்தில் பேரொளியாய் இருள கற்றி இருப்பதன் மெய்யருட் காரணத்தை விளக்கி அருளல் வேண்டும்.

## நவமணிகளைப் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும் கமலம் அன்னை
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை விட அரவின்
பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையானிடம் சேர்பவளே. 37

எட்டுத் திக்குகளையும் ஆடையாகக் கொள்ளும் எம்பிரானின் வாமபாகத்தே இருக்கும் தேவியே! நின்கைகளிலே கரும்புவில்லும் புஷ்பபாணங்களையும் கொண்டுவிளங்கும் நீஉன் திருமார்பில் முத்துமாலையையும், இடையிலே இரத்தினம் பதித்த மேகலையும் பட்டும் அணிந்திருப்பது வியப்பிற்குரியதாக இருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வேண்டியதை வேண்டியவாறு அடைய

பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத் திருநகையும் துணையா எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது துடியிடை சாய்க்கும் துணை முதலையா
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. 38

தேவலோகத்தை ஆளவிரும்பும் அடியவர்களே! சிவனின் தவத்தை குலைத்து இடப்பாகத்து இடம்பிடித்து சிவந்ததிருவாயால் முல்லைப் புன்முறுவல் பூக்கும் அபிராமித் தேவியை வணங்குவீராக.

### கருவிகளைக் கையாளும் வலிமை பெற

ஆளுகைக்கு உந்தன் அடித்தாமரைகளுண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உந்தன் விழியின் கடையுண்டு மேல் இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்து வில்லான் பங்கில் வாணுதலே. 39

முப்புரம் எரித்த சிவபிரானின் இடப்பாகத்தே ஒளிபொருந்திய அழகிய நெற்றியோடு காட்சிதரும் அபிராமித்தேவியே! என்னை அடிமைகொள்ளும் நின் திருவடிகளும், இயமனிடத்திருந்து மீளுதற்கு உந்தன் அருட்பார்வையும் இருக்க அவற்றையடையாது இருப்பேனாயின் அது என்குறையல்ல. உன் குறையாகும்.

### பூர்வபுண்ணிய பலன் தர

வாணுதற் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்திறைஞ்சிப்
பேணுவதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியைக் காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே. 40

ஒளிபொருந்திய நெற்றியினையுடைய அபிராமித்தேவியை, விண்ணவர்களாலும் விரும்பித் தொழப்பெறும் தாயை பாசஞானங்களாலோ அறியமுடியாத எம்பெருமாட்டியை என்கண்களால் தரிசிப்பது நான் முன்புசெய்த புண்ணியமேயாகும்.

### நல்லடியார் நட்புப் பெற

புண்ணியம் செய்தனமே மனமே புதுப்பூங்குவளைக்
கண்ணியம் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணியிங்கே வந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணி நம் சென்னியின் மேல பத்மபாதம் பதித்திடவே. 41

மனமே! அன்றே பூத்த நீல குவளை மலர்போன்ற கண்களையுடைய அபிராமித்தேவியும், அவரை இடப்பாகத்தே சுமந்த சிவனும் என்னைத் தன் அடியார் மத்தியில் இருத்தி என்சிரசில் தம்திருப்பாதங்களை சூடுவதற்கும் நீயும் நானும் எத்தனை கோடி புண்ணியங்களை செய்திருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகினை வசப்படுத்த

இடங்கொண்டு விம்மமி இணைகொண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கைமலை கொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமாழி வேதப்பரிபுரையே. 42

விசாலித்து பூரித்து இணைஒத்து நெருங்கியுள்ள மென்மையாகிய தன மலையையும் அல்குற்தேரையும்கொண்டு இறைவனது திருமார்பை நடனசாலை ஆக்கி நடமிடும் தேவி வேதங்களாகிய சிலம்பை அணிந்தவளாவாள்.

## தீமைகள் ஒழிய

பரிபுரச்சீறடிப் பாசாங்குசை பஞ்சபாணியின் சொல்
திரிபுரசுந்தரி சிந்தூர மேனியள் தீமை நெஞ்சில்
புரிபுரவஞ்சரை அஞ்சக்குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரைமேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே. 43

திரிபுரசுந்தரியாக விளங்கும் அபிராமித்தேவியே! வஞ்சகரை அழிக்கும் பஞ்சபாணங்களை உடையவளாகவும், பாசாங்குசம் ஏந்தியவளாகவும், சீறடி உடையவளாகவும், இனிய சொற்களை உடையவளாகவும் முப்புரமெரித்த சிவ னின் இடப்பாகத்திருப்பவளாகவும் விளங்குகிறாள்.

## பிரிவுணர்ச்சி அகல

தவளே இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலே இறைவியுமாம்
துவளேன் இனியொரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டுசெய்தே.

தவச்செல்வியான அபிராமித்தேவியே! சிவனின் மனைவியாகவும், தாயா கவும் விளங்குவதனாலும், மேலான கடவுளர் எல்லோருக்கும் மேலான கடவுளாகவும் இவளே விளங்குவதால் இனியொரு மெய்த்தெய்வம் உண்டென தொண்டு செய்து வருந்தேன்.

## உலகோர் பழியிலிருந்து விடுபட

தொண்டு செய்யாது நின்பாதந் தொழாத துணிந்திச்சையே
பண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அதுகை தவமோ அன்றிச்செய்தவமோ
மீண்டு செய்தாலும் பொறுகை நன்றேபின் வெறுங்கையன்றே. 45

அபிராமித் தாயே! உன்பாதங்களுக்கு மெய்த்தொண்டு செய்யாதிருந்த தவத்தவர்கள் உண்டோ? இல்லையோ? அவ்வாறு தொண்டு செய்து பணியாது இருந்தவர்களைப் போல நானும் இருந்திருப்பின் அவர்களை மன்னித்தருளியது போன்று என்னையும் மன்னித்தருள்வாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல் நடத்தையோடு வாழ

வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்மடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புதுநஞ்சுண்டு
கறுக்குந் திருமிடற்றாள் இடப்பாகம் கலந்து பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே

உன்னடியவர்கள் வெறுக்கத்தக்க செயல்களைசெய்தாலும் அவர்களை பொறுக்கும் தன்மையயே மேலானதன்றோ! நஞ்சை உண்டமையாலே கறுத்திருந்த மிடற்றையுடைய பெருமானின் இடப்பாகத்தே வீற்றிருக்கும் அம்மையே என் வேண்டுதலை நீ மறுத்தாலுங்கூட உன்னை வாழ்த்துவதில் நான்தவறமாட்டேன்.

## யோகநிலை அடைய

வாழும் படியொன்று கண்டு கொண்டேன் மனத்தை ஒருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை யெட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

நான் வாழ்வதற்காதார பொருளான மெய்ப்பொருளை கண்டு கொண்டேன். அது ஒருவர்மனதால் நினைப்பதற்கோ சொல்லுவதற்கோ உரியதல்ல. இந்த கடல், நிலம், எட்டுத்திக்கு மலைகள் அமைத்தையும் கடந்த சூரியசந்திர மண்டலங் கட்கப்பால் இருந்து ஒளி பிரகாசிக்கும் ஒளிப்பொருளாக அது திகழ்கின்றது.

## உடல் பற்று நீங்க

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போது இருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே. 48

ஒளிபொருந்திய பிறைச்சந்திரனை சூடிய பொன்மலை ஆகிய சிவனை குன்றாக கொண்டு படர்ந்திருக்கும் பசுங்கொடியாகிய அபிராமிதேவியை நெஞ்சில் பதித்து இடர்களிலிருந்து நீங்கி இமைப்பொழுதும் தாயைமறவாது இருப்பவர்கள் மீண் டும் குருதியும்,குடலும் கொண்ட அழியும் இவ்வுடலை (மீண்டு) பெறமாட்டார்கள்.

## மரணத் துன்பம் இல்லாதிருக்க

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மருகும் அப்போது வளக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசை வடிவாய் நின்ற நாயகியே. 49

யாழிசை உடைய நாதசொரூபியாக விளங்கும் அபிராமித்தாயே! உடலை தஞ்சமாக கொண்ட எனதுயிர் காலன்கைப்பட்டு தடுமாறும்போது நீ தேவமக ளிருடன் வந்து உனது திருக்கரத்தால் அஞ்சாதேயென்று அபயமளிப்பாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகையை நேரில் காண

நாயகி நான்முகி நாராயணி கை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதி நச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதாங்கியென்று
ஆயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே. 50

பிரமநாயகியும் நாராயணனின் துணைவியும் மலர்க்கணைகளை கரத்தில் தரித்தவரும் சிவனின் சக்தியும், உருத்திராணியும் சாமளாதேவியும் சர்ப்பமாலையை அணிந்தவரும், வராகியும், சூலபாணியும், மாதங்கியுமாகிய மந்திர நாமங்களை உடைய அபிராமி தேவியை சரணடைதலே நமக்கு நல்ல துணையாகும்.

## மோகம் நீங்க

அரணம் பொருளென்று அருள் ஒன்றிலாத அசுரர்தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன்னடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே. 51

முப்புர செல்வங்களே மிகுந்ததும் நிலையானதும் என எண்ணி அகந்தை கொண்டிருந்த முப்புரத்தவர்கள் செருக்கையும் அடக்கிய சிவபெருமானும், திருமாலுமே சரணம் எனவணங்கும் அபிராமிதேவியின் மெய்யடியவர்கள் இந்த பூமியிலே மரணம், பிறவி என்ற இருசக்கரத்திலும் அகப்படமாட்டார்கள்.

## பெருஞ் செல்வம் அடைய

வையகம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த
ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்பு முன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே. 52

பிறைசூடிய பெருமானின் அழகிய மனையாளாக வாய்க்கக்கப்பெற்ற அபிராமி அம்மையை முற்பிறப்பில் அன்பு செய்தவர்கட்கு இப்பிறப்பில் குதிரை, யானை பெருமுடி சிவிகை என்பனவோடு மாணிக்க ஆபரணங்களும் தாமாகவே கிடைக்கும்.

## பொய்யுணர்வு நீங்க

சின்னஞ்சிறிய மருங்கினிற் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலுங்கண் மூன்றுங் கருத்தில் வைத்துத்
தன்னந் தனியிருப்பார்க்கு இது போலும் தவம் இல்லையே. 53

சிற்றிடையில் உடுத்திய பட்டாடையும் பெருத்த இள முலைகளும் முத்துமாலையும் வண்டுகள் மொய்க்கும் கரிய கூந்தலும் உடைய முக்கண்ணியான அபிராமி தேவியின் அங்கங்களை கருத்திலிருத்தி தன்னந்தனியாக இருப்பவர்கட்கு இது போன்ற தவம் வேறொன்றுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடன் தீர

இல்லாமை சொல்லி ஒருவர் தம் பாற் சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நிலைகுவிரேல் நித்த நீடுவதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒருகாலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

வறுமையின் பிடியால் தளர்ந்து ஒருவரிடம் சென்று இழிவுபட்டு நில்லாத தன்மை யையும் நினைப்பீர்களானால் மெய்யடியார்களே! நித்தம் நீடுதவம் கற்காது கற கயவர்களிடம் செல்லவிடாது காக்கும் அன்னையின் பாதங்களில் சேர்வீர்களாக.

## மோன நிலை எய்த

மின் ஆயிரம் ஒரு மெய் வடிவாகி விளங்குகின்ற(து)
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாள் நடுவெங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவதொன்றில்லையே. 55

பேரொளியே ஒரு வடிவமாகி தியாணிக்கும் தன்மையுடைய ஆனந்தவல்லி வேதங்களின் முதல், நடு, இறுதியுமாக விளங்கும் முதல்வியாகிய அபிராமி தேவியை தியாணிக்காது விட்டாலும் நாம் விரும்புவதற்கொன்றுமில்லை. தியா ணித்தாலும் மோட்சமன்றி ஒன்றில்லை.

## யாவரும் வசமாக

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகெங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் எந்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா! இப்பொருளறிவார்
அன்ற ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே. 56

ஒன்றாய் உருவாகி பலவாய் விரிவடைந்து இவ்வுலகமெங்கும் பரந்து நிற்கும் அன்னை அபிராமிதேவி அனைத்தையும் கடந்துமிருப்பாள். அத்தகைய தாய் என் நெஞ்சிலே அழிந்துபோகாது நின்று அருளாட்சி செய்வதை எமது தலைவனான சிவனும் திருமாலுமே அறிய வல்லவர்களாவர்.

## வறுமை ஒழிய

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டமெல்லாம்
உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி ஒருவர் தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்ப வைத்தாய் இதுவோ உன்தன் மெய்யருளே. 57

சிவபெருமானருளால் அறம் வளர்த்து இந்த பூமியெல்லாம் உய்யும்படி காக்கும் உன்னையும் வணங்கி செல்வர்தம்பால் பாமாலையும் புனைந்துசென்று பொய்யும் மெய்யும் இயம்பவைத்தாய். இதுவோ உந்தன் உண்மைத்திருவருள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன அமை(த்)தி பெற

**அருணாம் புயத்தும் என் சித்(தாம்பு)யத்தும் அமர்ந்திருக்கும்**
**தருணாம் புயமுலைத் தைய(ல் ந)ல்லாள் தகைசேர்நயனக்**
**கருணாம் புயமும் வதனாம் புயமும் கராம்புயமும்**
**சரணாம்புயமும் அல்லால் கண்டிலேன் ஒரு தஞ்சமுமே.** 58

செந்தாமரைப்பூவிலும் என் மனத்திலும் விற்றிருக்கும் மென்மையான புயங்களையும் முலைகளையுமுடைய பெண்ணாகிய அபிராமிதேவியின் தகைமைவாய்ந்த கண்களும் தாமரை மலர்போன்ற முகமும் திருக்கர மலரும் தஞ்சமன்றி வேறொரு துணையுமில்லை.

பிள்ளைகள் நல்லவர்களாக வர

**தஞ்சம் பிறிதில்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே**
**நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள்சிலையும்**
**அஞ்சு அம்பும் இக்கு அலராக நின்றாய் அறியாரெனினும்**
**பஞ்சு அஞ்சு மெல்லடியார் பெற்ற பாலரையே.** 59

கரும்புவில்லையும் புஸ்பபாணங்களையும் கையிலேந்திய முத்தொழில் தேவியே, உன்னைவிட பிறிதொரு துணையுமில்லை என எண்ணும் நான் உன்னை ஒரு சீராக நினைக்க வல்லவனல்லன். பஞ்சையும்விட மென்மையான பெண்கள் தாம் பெற்றெடுத்த பாலகர்களை பேதையரானாலும் மன்னிப்பாரல்லரோ?

மெய்யுணர்வு பெற

**பாலினுஞ் சொல் இனியாய் பனிமாமலர்பாதம் வைகக**
**மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை (வார்) சடையின்**
**மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் (ஒ)ரு**
**நாலினும் சால நன்றோ அடியேன் முடை நாய்த்தலையே.**

பாலிலும் இனிமையான சொல்லையுடைய தேவியே! திருமால் (ஆ)தி தேவர்கள் வணங்கும், சிவபெருமானின் திருமுடி இடத்தும் எட்டாததனால் (கீழுள்ள) பாதங்களின் கீழ்நின்றும் துதிக்கும் தேங்களின் பிரணவ பீடங்கள் (நா)ன்கிலும் பார்க்க உயர்ந்த உன் திருவடிகளை போற்றுதற்கு என் இழிந்த தலை சிறந்த தாமோ?

மாயையை வெல்ல

**நாயேனையும் இங்கொரு பொருளாக நயந்து வந்து**
**நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய் நின்னை உள்ள வண்ணம்**
**பேயேன் அறியும் அறிவு தந்தாய் என்ன பேறுபெற்றேன்**
**தாயே மலை மகளே செங்கண்மால் திருத்தங்கச்சியே.** 61

மலைமகளே! திருமாலின் அழகிய தங்கையே! நாயிலும் இழிந்தவனையும் ஒரு பொருளாகக் கொண்டு நீயே என்னை நாடிவந்து நினைவில்லாமல் ஆட்கொண்டாய். நீ இருக்கின்ற தன்மையை அறிவில்லாத சிறியேனும் அறிந்துகொள்கின்ற அறிவினை தந்துதவி இருக்கின்றாய் தாயே! இதற்கு என்ன பேறை நான் பெற்றிருக்கிறேனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வித்தையும் அச்சமும் அகல

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கண் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடையக்
கொங்கைக் குரும்பை குறியிட்ட நாயகி கோகனச்
கொங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே. 62

பொன்பேர் மலையை பொருளாகக் கொண்டு முப்புரங்களை எரித்து யானையின் தோலை உரித்து அதனை போர்த்துக்கொண்ட சிவனின் திகவுருவத்தில் அழகிய மார்பகங்கள் பொருந்தும் படியாக வீற்றிருக்கின்ற அபிராமி தேவியின் திருக்கரத்தில் இருக்கும் கரம்பவில்லும் மலரம்பும் என் மனக்கண்ணில் பதிந்துள்ளன.

### அறிவு தெளிவோடு இருக்க

தேறும்படி சில ஏதுவும் காட்டிமுன் வெல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றில் கொட்டும் தறிகுறிக்கும் சமயம்
மாறும் தலைவி இவளாயிருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயமுண்டென்று கொண்டாடிய வீணருக்கே. 63

அறு சமய உண்மை வளிகட்டும் மூத்தவள் அபிராமி தேவியே என்பதனை உணர்ந்து வீடுபேறு (உய்து) எய்தும் வழி கூறினும் வேறுசமயங்கள் உண்டு என்று அலைந்துபோகுமம் வீனர்கட்கு சைவத்தின் உண்மைகளை உரைப்பது மலையில் சிறுகோலால் அடிப்பதற்கு ஒப்பானது.

### பக்தி பெருக

வீணே பலிகவர் தெய்வங்கள் பால் சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டு கொண்டேன் நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன் ஒரு பொழுதும் திருமேனிப்பிரகாசமன்றிக்
காணேன் இருநிலமும் திசை நான்கும் ககனமுமே. 64

அபிராமிதேவியே! உன்பால் மிகஅன்பு கொண்டபின் வீணே உழன்று சிறுதெய் வங்கட்கு பலிகொடுத்துவாழேன், உன்னுடைய புகழையன்றி பிறிதொன்றை பேணேன். இப்பெரிய பூமியிலும் வானிலும் நான்கு திக்குகளிலும் காண்பதுன் ஒளியேயாகும்.

### ஆண் மகப்பேறு அடைய

ககனமும் வானும் புவனமும் காணவில் காமன் அங்கம்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முன் நான்கு இருமூ ன்று எனத்தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே. 65

தாயே! இந்த அண்டமும், தேவலோகம், பூமி என்பனவம் காணும்படியாக காமனை தகனம்செய்த அந்த சிவன் நீண்ட கைகளை உடைய சிவந்தமுகம் ஆறும், பன்னிரு விழி, புயம், கரம் உடைய முருகப்பெருமான் பேரறிவோடு தோன்றியமை உன்னுடைய பெருவலிமையால் அன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞராக

வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின் மலரடிச் செம்
பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் பசும்பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின்திருநாமங்கள் தோத்திரமே. 66

செழுமையான மேருமலையை வில்லாககொண்ட சிவபிரானிடம் ஒன்றித்திருக்கும் அபிராமிதாயே! கல்வியறிவு ஒன்றை நானறியவில்லை.ஆயினும் சிறியவனான நான்உன் மலர்போன்ற பாதம்களை பணிவதன்றி வேறுபற்றுக்கள் எதனையும் கொள்ளவில்லை. என்னுடைய வினைப்பயனால் தோற்றுவிக்கப்படும் இச் செய்யுளில் சிறப்பு இல்லாதுவிடினும் இதிலுள்ள உன் திருநாமங்கள் மீளமீள சொல்லுவதற்கு உரியதாகும்.

## பகைவர்கள் அழிய

தோத்திரம் செய்த தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலா நிற்பர் பாரெங்குமே. 67

அபிராமித்தேவியே! நின் பொற்திருமேனியை ஒருகணப்பொழுது தன்னும் சிந்தித்து மனதில் இருத்தாதவர்கள் கொடை, கல்வி, குணம்கள் எல்லாம் இழந்து தம் குலப்பெருமை அழிந்து பிச்சையெடுத்து உன்றுஉழர்வர் இந்தபூமி எங்கும்.

## நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர்விசும்பும்
ஊரும் உருகு சுவையொளி ஊறொளி ஒன்றுபடச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாருந் தவம் உடையார் படையாத தனம் இல்லையே. 68

ஐந்து தன் மாத்திரைகளிலும் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) ஐம்பூதங்களிலும் (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்) ஐம் பூதப் பொருள்களிலும் நிறைந்தவர் சிறு பாதம் கொண்ட சிவகாம சுந்தரியே என்று எண்ணி வழிபடுபவர்கள் பெறமுடியாத செல்வம் எதுவும் இல்லை.

## சகல சௌபாக்கியங்களும் அடைய

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே. 69

செல்வம், கல்வி ஒருநாளும் சோர்வடையாத மனம், தரவு அற்ற சுற்றம், தெய்வீஒளி, இவைபோன்ற நல்ல எல்லாவற்றோடும் நல்ல அன்பைத் தருவதும் அபிராமி அன்னையின் கடைக்கண் கருணைப் பார்வையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுண் கலைகளில் சித்திபெற

கண்களிக்கும்படி கண்டுகொண்டேன் கடம்பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமும் அகி மாதங்கர் குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே. 70

திருக்கடம்பவன காட்டிடையே என் கண்கள் குளிருமாறு பசுமை நிறத்தோடு வீணை தாங்கிய திருக்கரத்தோடு பாணர் குலத்தில் தோன்றிய அழகிய பெண்கள்போன்ற எம்பெருமாட்டியின் பேரழகை கண்டு தரிசித்தேன்.

## மனக்குறைகள் தீர

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என் குறையே. 71

கிடைத்தற்கரிய வேதங்களாலும் போற்றி வணங்கப்பெறும் சிவந்த பாதங்களை உடைய அழகியே ஒப்புமை கூறமுடியாத பசமையான இளமதிபோன்ற குழந்தை வடிவினளானன அபிராமிதேவி உனக்கு துணை இருக்க மனமே! உனக்கு என்ன குறை? நீ கவலை கொள்ளாதிருப்பாயாக.

## பிறவிப்பிணி தீர

என்குறை தீரநின்று ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
நின் குறையே அன்றி யார்குறை காண் இரு நீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீர எங்கோன் சடைமேல் வைத்த தாமரையே. 72

மின்னலை வெல்லும் மென்மையான இடையை உடைய அபிராமி அம்மையே! தன்குற்றம் நீங்க அமிர்தகடேஸ்வரர் உன்னை தன் திருச்சடையில் சூடினார். இன்று இப்பெரிய பூமியில் என் பிறவிப்பிணி நீங்கி பரமுத்திபெற உன்னை நான் துதிக்கின்றேன். அதனை எய்தாது மீண்டும் பிறவிப் பிணியில் உழல்வேனாயின் அது எனது குற்றமல்ல. உனது குற்றமே ஆகிவிடும்.

## குழந்தைப்பேறு உண்டாக

தாமம் கடம்பு படைபஞ்சபாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவம் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடிச் செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே. 73

முக்கண்ணும், நான்கு திருக்கரங்களும் செந்நிறமும் தாமமும், தடப்பமாலை படைக்கலம் உடைய பஙசபாணங்களும் கரும்புவில் என்பவற்றோடு வீற்றிருக்கும் அபிராமிதேவியே! வாமப்பொழுதில் வயிரவரால் துதிக்ககபடுபவர் அத்தகைய தாய் தன் திருவடிகளை எமக்கு பேமமாக அளித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலில் மேன்மை அடைய

நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன் என்று கொண்டவர் பாவையர் ஆடவம் பாடவும் பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

முக்கண்களையுடைய சிவனாலும், வேதங்களாலும், திருமால், பிரமா ஆகியோராலும் துதித்து வணங்கப்படும் அபிராமி அன்னையின் புகழைத் துதித்து வணங்குபவர்கள் தேவமாதர் ஆடிப்பாடி மகிழ பொற்கட்டிலில் தேவலோக இன்பத்தை பெறுவர்.

## விதியை வெல்ல

தங்குவர் கற்பக தருவின் நிழலில் தாயர் அன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்க இவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே. 75

கற்பகதருவின் கீழ் இருக்கும் தேவர்கள் உள்ளே மலைகளையும், தடல், மற்றும் புவனத்தையும் உந்திக்கமலத்துதித்த பிரமன் படைத்தருள உதவிய அபிராமி தேவியே! இவ்வுலக பிறப்பு இறப்புக்களை கடந்து அழியாத பேரானந்தமான முத்தியை அளிக்க வல்லவள்.

## தனக்கு உரிமையானதைப் பெற

குறித்தேன் மனத்தில் நின் கோலமெல்லாம் நின்குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வலி வண்ட கிண்டி
வெறித்தேன் அவிழ் கொன்றை வேணிப்பிரான் கூற்றை மெய்யில்
பறித்தேன் குடிபுகு தும்பஞ்சபாண பயிரவியே. 76

தேனொழுகும் கொன்றைமாலை அணிந்த சிவனின் இடப்பாகம் அமர்ந்தவளே! உன்னுடைய குறிப்பை மனதாலே அறிந்து வழிபடத் தொடங்கினேன். அதனால் எனது விதிவழியே வந்தயமனும் என்னுயிரை கவரமுடியாது தடுத்துக்கொண்டேன்.

## பகை அச்சம் நீங்க

பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிர் அவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரங்கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகியென்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

நால்வேதங்களாலும் உச்சரிக்கப்படும் பைரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி வஞ்சகரை அழிக்கும் காளி, ஒளிப்பிரகாசமான கலாமதி, கலாவயி ரவி, சண்டி, மாலினி, சூலி, வராகி என்றெல்லாம் மெய்யன்பர் உன்னைத் துதித்து வழிபடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகல செல்வங்களையும் அடைய

செப்பும் கனக கலசமும் போலுந் திருமுலைமேல்
அப்பம் களப அபிராம வல்லி அணிதிரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங்கடையும்
துப்பும் நிலவும் எழுதி வைத்தேன் என் துணை விழிக்கே. 78

திரண்ட அழகிய மார்பகத்தில் பரிமள கலவை அப்பிய அபிராமி தேவிக்குத் தெய்வத்தோழியர் அணிவித்து அழகுபடுத்திய கொப்புவாளி வயிரத் தோடு என்ற ஆபரணங்களையும் கண்களின் திருக்கடையையும் திருவாயையும் புண்ணகையையும் அழுத்தமாக எனது மனதில் வைத்துக்கொண்டேன்.

## கட்டுகளில் இருந்து விடுபட

விழக்கே அருள் உண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடைக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே. 79

அபிராமித்தாயின் விழிகளிலே கருணை இருக்க அத்தாயை வேதவழியில் நின்று வழிபடும் சிறந்த மனவலிமை இருக்க அவ்வழிவிடுத்து பழிபாவங்களை செய்து பாழ்நரகத்தில் அழுந்த இருக்கும் கீழானவர்களோடு எனக்கென்ன கூட்டு இனி.

## பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட

கூட்டியவா என்னைத் தன்னடி யாரில் கொடியவினை
ஒட்டியவா என்கண் ஒடியவா தன்னை உள்ள வண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடமாடகத் தாமரை ஆரணங்கே. 80

தன் அடியாரிடத்து சேர்ப்பித்ததும் எனது கொடுவினைகளை அழித்து தன்னை வெளிப்படுத்தியதும் என்னுடைய புறக்கண்ணும், அகக்கண்ணும் ஆனந்த நிலை அடையவைத்ததும் தாமரை மலரில் வீற்றிருக்கும் அபிராமித்தாயே ஆகும்.

## நன்னடத்தை உண்டாக

அணங்கெ அணங்குகள் நின்பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவாரை வாழ்த்துகிறேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவு ஒன்றிலேன் என்கண் நீ வைத்தபேரொளியே. 81

பெண்ணே (தாயே!) பரிவாரங்களனைத்துக்கும் தாய் நீ ஆகையால் உன்னை அன்றி வேறோர் தெய்வத்தை வணங்கவோ வாழ்ததவோ மாட்டேன். வஞ்சனை படைத்தாரோடும் எனது, உனது என்ற பாகுபாடு உடையவர்களோடும் சேர்ந்து கொள்ளேன். அறிவிலே சிறியவன் எனினும் என்னிடம் நீ வைத்த அன்பு எம்மாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன ஒருமைப்பாடு அடைய

அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுதொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே. 82

என் இதயக்கமலத்திருக்கும் பெண்ணாகிய தாயே! இந்த உலகமெல்லாம் உன் ஒளிவடிவாக இருக்க அவ்ஒளித்திருமேனியை உள்ளத்தில் தியாணித்து மகிழ் வெய்தி அந்தகரணங்கள் (சித்தி, புத்தி போன்ற) மயங்கி ஞானவெளிப்பட்டு நிற்கும் உன் திருவருளை எவ்வாறு மறந்துவாழ்வேன்.

## ஏவலர் பலர் உண்டாக

விரவும் புதுமலர் இட்டு நின்பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார் அமையோர் எவரும்
புரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக்காவும் உடையவரே. 83

அபிராமிதேவியின் பாதகமலங்களை தினமும் மலர்கொண்டு அர்ச்சித்து வழி படும் அடியவர்கள் இரவும் பகலும் துதிப்பதனால் அவர்கள் தேவலோகத்தையும் இந்திரபதவிக்கான ஐராவதம்,பகிரதி என்பவற்றை கிடைக்கப்பெறுவர் அல்லரோ.

## சங்கடங்கள் தீர

உடையாளை ஒல்குசெம்பட்டுடையாளை ஒளிர்மதிசெஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளைத் தயங்கு நுண்ணூல்
இடையாளை எங்கள் பெம்மான் இடையாளை இங்கு என்னையினிப்
படையாளை உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே. 84

என்னை ஆட்கொண்டருளியவளை சிவந்த பட்டாடையை உடையவரும், ஒளி பொருந்திய ஞானமதியை சூடியவரும், வஞ்சகர்களின் நெஞ்சை ஒருகாலமும் சென்றடையாதவரும், அசைந்தாடும் மெல்லிய இடையை உடையவளும், சிவ பெருமானின் இடப்பாகத்தில் இருப்பவளையும், இனி என்னைப் படைக்காதவளை யும், உங்களையும் இனி படைக்காவண்ணம் வேண்டிக்கொள்ளுங்கள்.

## துன்பங்கள் நீங்க

பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும் முலைமேல் முத்து மாலையுமே. 85

பார்க்கும் திசையெங்கும் என்னுடைய பிணிகளை தீர்க்கும் அபிராமி தேவியின் திருமேனியும் அங்குசபாசாங்குசமும் வண்டுகள் ஆர்ப்பரிக்கும் ஐவகை மலர்க் கணைகளும் அன்னையின் சிற்றிடையும் அவளது முலைமேலே படிந்த முத்து மாலையும் தென்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயுத பயம் நீங்க

மால் அயன் தேட மறைதேட வானவர் தேடநின்ற
காலையும் சூடகக்கையையும் கொண்டு கதித்த கப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே. 86

பால், தேன், பாகு போன்ற இனிமையான பணிவை வருவிக்கின்ற அபிராமி தேவியே! கொடிய யமன் என்மேலே வேலை விடுகின்றபோது பிரமா, விஷ்னு ஆகியோராலும் காணமுடியாமல் நிற்கும் நீ வளைவான முன்கையிலே சங்கு, வளையலோடு காட்சி தந்தருள வேண்டும்

## செயற்கரிய செய்து புகழ்பெற

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின்திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்டமெல்லாம்
பழிக்கும் படி ஒரு பாகங் கொண்டாளும் பராபரையே. 87

மலரம்பெய்த மன்மதனை தன் விழியாலே எரித்த சிவபிரானின் இடப்பாகத்தை, அவர் தியானத்தை குலைத்து பிடித்துக்கொண்ட தாயே! பிரமா, விஷ்னு ஆகிய தேவர்களும் சிந்தித்துகாணமுடியாத உன் திருவடிவை என் ஊனக்கண்ணாலும், ஞானக்கண்ணாலும் காணவைத்தது என்ன திருவுளத்தினாலோ?

## எப்போதும் அம்பிகை அருள் பெற

பரமென்று உனையடைந்தேன் தமியேனும் உன் பத்தருக்குள்
தரமன்று இவனென்று தள்ளத்தகாது தரியலர்தம்
புரமன்று எரியப் பொருப்புவில் வாங்கிய போதில் அயன்
சிரமொன்று செற்றகையான் இடப்பாகம் சிறந்தவளே. 88

முப்புரங்களை தகனம் செய்து, மேருமலையை கையில் கொண்டு, பிரமன் தலைகொய்த சிவபெருமானின் இடப்பாகத்திருக்கும் அன்னையே உன்னையே சரணம் என்று அடைந்துகொண்டேன். ஆகவே உன் அடியவர்கட்குள்ளே நான் தகுதியற்றவன் அல்லன் என்பதனை நீ உரைத்தலே தகுதியான செயலாகும்.

## யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவே நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின் துணைவரும் நீயும் துரியமற்ற
உறக்கந்தர வந்து உடம்போடு உயிர்உறவு அற்று அறிவு
மறக்கம் பொழுது என் முன்னே வரல் வேண்டும் வருந்தியுமே. 89

இலக்குமியை அதிட்டித்து ஆட்சிசெய்யும் அபிராமிதேவியே! உன் திருவடிகளை என் சிரசில் வைத்தாளவும், தன் அடியார்க்கு முத்திப்பேறளிக்கும் உன் நாயகனான சிவனும் நீயும் என்னுடைய உடல் உயிர் தொடர்பின்றி மரணத் தறுவாயில் போகும்போது காட்சிகொடுத்து சிவத்துயில் அளிப்பீர்களாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவர் மனைவி கருத்து வேற்றுமை நீங்க

**வருந்தா வகையென் மனத்தாமரையினில் வந்து புகுந்து**
**இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்**
**பொருந்தாது ஒரு பொருள் இல்லை விண்மேவும் புதல்வருக்கு**
**விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.** 90

திருக்கடவூர் வாழும் அபிராமிதேவியே! தேவர்கட்கு அமுதம் வழங்க பாற்கடல் கடைய துணைபுரிந்தவள், அவள் எனது மனதாகிய தாமரையை இருப்பிடமாக கொண்டமையால் எனக்கு பொருந்தாது என்ற ஒரு பொருளும் இனி இலை. (சகலதும் கிடைக்கும் என்பதாம்.)

## அரசாங்கச் செயலில் வெற்றிபெற

**மெல்லிய நுண்ணிடை மின்னனையாளை விரிசடையோன்**
**புல்லிய மென்முலைப் பொன் அனையாளைப் புகழ்ந்து மறை**
**சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழும் அவர்க்குப்**
**பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே.** 91

மின்னல் போன்ற ஒளியுடைய மென்மையான இடையை உடையவரும், சிவனால் தழுவப்பெறுபவருமான அபிராமிதேவியை வணங்குபவர்கட்கும், அவள் அடியவர்களை வளிபடுபவர்கட்குமே ஐராவதமேறும் இந்திரபதவி கிடைக்கும்.

## மனநிலை பக்குவமடைய

**பதத்தே உரகிநின் பாதத்திலெ மனம் பற்றி உன்றன்**
**இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவர்**
**மதத்தே மதிமயங்கென் அவர்போன வழியும் சொல்லேன்**
**முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.** 92

முதல் தேவர் மூவரும் வணங்கவும் (பிரமா, விஷ்னு, ருத்திரன்) ஏனைய அடியவர்கள் வணங்கவும் நிற்கும் அபிராம தாயே! உன்னை கசிந்து நினைந் உன் பாதங்களிலே என்மனம் படிந்த பின்னே பிறமதத்தை நாடியோ, அல்லது அவர்கள் போகும் வளியிலோ நான் போகமாட்டேன்.

## உள்ளத்தில் ஒளி உண்டாக

**நகையே இ∴திந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு**
**முகையே முகில் முலைமானே முதுகண்முடிவில் அந்த**
**வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்**
**மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.** 93

இந்த பூமி அனைத்தையும் படைத்தருளிய அன்னைக்கு பெருத்த மார்பகம், தாமரை அம்பு என்பன நகைப்பிற்குரிய ஒன்றாகும். இதன்படி அவர் பிறவி எடுத் ததும்பொய்யே. அவரைநாம் பார்வதிதேவி என்று சொல்லுவதும் குற்றமே. இவரின் உண்மைத்தத்துவத்தை அறிந்து வழிபடுகிறோம் என்பதே உண்மையா கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனநிலை தூய்மையாக**

விரும்பித் தொழும் அடியார் விழி நீர்மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பி ஆனந்தமாகி அறிவிழந்து
கரும்பிற் களித்து மொழிதடுமாறி முன் சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபிராமி சமயம் நன்றே. 94

மெய்விருப்பொடு வழிபடும் அடியவர் விழிகளில் நீர் வளியவும், மெய்சிலிர்க்கவும் ஆனந்த வெள்ளமாகியும் பசுஞானமிழந்தும், மகிழ்ச்சி மிதந்தும் வாய்குழறியும் நிற்கும் பித்தம் தலைக்கேறியவர் போல்வார் என்றால் அதற்கு முதலிடமான அபிராமி சமயம் நல்லதே ஆகும்.

**மன உறுதி பெற**

நன்றே வருகினும் தீதே விளைகினும் நானறிவது
ஒன்றேயுமில்லை உனக்கேபரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாதகுணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே. 95

மலையத்துவசன் பெற்றெடுத்த பெருமைபடைத்த அபிராமித் தேவியே! நல்லதாயினும், தீயதாயினும் அவை உன் செயலாக காண்பதால் நான் அறியும் செயலொன்றுமில்லை. உன்னிடமே எனக்குள்ள செயல் என்று அன்றே ஒப்படைத்துவிட்டேன். இனி எதுவும் உன்செயலே.

**எங்கும் பெருமை பெற**

கோமளவல்லியை அல்லியந் தாமரைக் கோணில் வைகும்
யாமள வல்லியை ஏதமிலாளை எழுதரிய
சாமள மேனிச் சகல கலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதபரே. 96

மலர்மிசை எழுந்தருளும் இளமைநலம் வாய்ந்த வல்லிக்கொடி போன்றவளை, குற்றமற்றவளை பச்சைவண்ண கலாமயிலை தம்பால் இயன்றவரை தொழுகின்றவர்கள் ஏழு உலகங்கட்கும் தலைவராய் வாழ்வார்கள்.

**புகழும் அறமும் வளர**

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங்கோன்
போதிப் பரமன் புராரி முராரி பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், தேவர் தலைவனான இந்திரன், பிரமன், சீகண்ட உருத்திரர், விஷ்னு, அகத்தியர், கந்தப்பெருமான், விநாயகர், மன்மதன் முதலான புண்ணியத்தைப் பெற்ற எண்ணிறந்தோர் அபிராமித்தாயான இப் பெண்ணை வழிபடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வஞ்சகர் செயலிலிருந்து பாதுகாப்பு பெற

தைவந்த நின்னடித் தாமரை சூடிய சங்கரற்கு
கைவந்த தீயும் தலைவநத ஆறுங்கரந்த தெங்கே
மெய்வந்த செஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர் தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகழ் அறியா மடப் பூங்குயிலே. 98

மெய்யன்பர் அல்லாது கோபத்தோடு பொய்மொழி கூறும் நெஞ்சில் உறையாத அபிராமித்தாயே! உன் ஊடல் தீர்க்க சிரசில் சூடிய சிவபிரான் அப்போது தன் கையில் உள்ள அபிசார அக்கினியான ஓமத்தீயையும் கங்கா நதியையும் எங்கே மறைத்துக்கொண்டார்.

## அருள் உணர்வு வளர

குயிலாய் இருக்கும் கடம்பா அடவியிடைக் கோலவியன்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசம்பில் தமலத்தின்மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே. 99

மலையத்துவசன் அன்று சிவபெருமானுக்களித்த அபிராமிதேவி மதுரையில் ஒளி பொருந்திய மரகதகுயிலாய் இருந்து அருள் பாலிப்பார். ஆகாயத்திடை பால சூரியராய் இருந்து அருளுவார். வெண் தாமரையில் வெண்ணிற அன்னமாய் விளங்கி அருளுவார்.

## அம்பிகையை மனத்தில் காண

குழையைத் தழுவிய கொண்றையற் தார்கமழ் கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும் கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும் வெண்நகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே

கூந்தலில் கொன்றைமாலை அணிந்த அன்னையின் மணம் கமழும். அழகிய திருதனத்தனங்களும் மூங்கில் போனற அழகிய தோள்களும். கரும்புவில்லும். காமம் பொருந்திய புஷ்பபாணங்களும் வெண்மையான புன்னகையும் மாவின நேர்விழியும் எனது மனதில் எப்பொழுதும் நினைவில் வந்துகொண்டிருக்கினறன.

## நூற்பயன்

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவியடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே

எங்கள் தாயை, அந்த அபிராமிதேவியான உலகங்களைப் படைத்தவளை மாதுளம்பூ நிறத்தவளும் (மாது-பெண். உளம்-உள்ளம்போல, நிறத்தாள்-குணமுடையவள். எனவே மென்மையான குணமுடையவள் எனவும் கொள்க.) இப் பூ உட்பட அனைத்தையும் காததவளை பாசாங்குசம், கரும்புவில் எல்பவற்றை உடையவளுமான அபிராமித்தேவியை வணங்குபவர்கட்கு ஒருதீங்குமிலலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சிவசக்தி துணை

குமரகுருபரர் அருளிய

# சகலகலாவல்லி மாலை

வெண் தாமரைக்கன்றி நின்பதந் தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ சகமேழும் அளித்து
உண்டான் உறங்க வொழித்தான் பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றும் ஐம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே சகல கலா வல்லியே.

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது ஆர்ந்துன் அருட் கடலில்
குளிக்கும் படிக்கென்று கூடும்கொலோ உளம்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே சகல கலா வல்லியே.

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே சகல கலா வல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாத பங் கேருகம்என்
நெஞ்சத் தடத்து அலராதது என்னே நெடுந் தாட்கமலத்து
அஞ்சத்துவசம் உயர்ந்தோன் செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசு ஒத்திருந்தாய் சகல கலா வல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுது எளிது எய்த நல்காய் எழுதாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பகனும் என்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பால் அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலா வல்லியே.

சொல் விற்பனமும் அவதானமும் கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்து அடிமைகொள்வாய் நளினா சனம்சேர்
செலிவக்கு அரிதென்று ஒருகாலமும் சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே சகல கல வல்லியே.

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ் ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய் புலக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு அரசன்ன நாண நடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலா வல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய் படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலா வல்லியே.

***எல்லம்வல்ல தாயே! மாற்றங்களை ஏற்கும் பண்பும், மாற்ற முடியாதவற்றை அனுசரிக்கும் பண்பும் தந்தருளும். நீயே அம்மாற்றங்கட்கான மனவலிமையாகவும் இருக்க வேண்டும்.***

**'உள்ளத்தால் பொய்யற்க பொய்த்தபின்**
**தன் னெஞ்சு தன்னை சுடும்.'**

***உள்ளத்தால் பொய்யனானால் அதுவே உன்னுடைய வாழ் நாளை அழித்துக்கொண்டிருக்கும். – நெஞ்சுக்கு துரோகமின்றி மனச்சாட்சியின்படி நடக்கும்போது எம்மைக் கடந்த சக்தி உனக்கு காப்பருளும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நூல் வெளியீட்டிற்கு உதவியோர்

1. திருமதி Dr. கவிதா இராஜசேகரம்
2. ஆக்கத்திற்கு உடன் இருந்து உதவியோர்: S. சுகந்தி, T. தவரூபன்
3. பண உதவி: வல்வெட்டித்துறை, கம்பர்மலை, உடுப்பிட்டி பகுதிகளைச் சேர்ந்த அன்பர்கள்.
4. அச்சேற்ற உதவியோர்: ஸ்ரீவாணி பதிப்பகத்தினர், இலக்கணாவத்தை, உடுப்பிட்டி.

| பெயர் | ரூபா | பெயர் | ரூபா |
|---|---|---|---|
| சி. சோமகுலசுந்தரம் | 1000 | S. ஸ்ரீதரன் | 500 |
| செ. சிவலிங்கம் | 1000 | S. சுப்பிரமணியம் | 500 |
| சி. லம்போதரன் | 1000 | M. திருச்செல்வம் | 500 |
| இ. இராகுலன் | 1000 | M. காசிநாதன் | 500 |
| க. இராசமணி | 1000 | T. ஸ்ரீதரன் | 500 |
| த. மலர்க்கொடி | 1000 | S. பத்மசுந்தரம் | 500 |
| இ. இரவீந்திரன் | 1000 | Y. சுப்பிரமணியம் | 500 |
| துஷ்யந்தன் | 500 | A. அருளினி | 300 |
| P. இரவிச்சந்திரன் | 500 | V. சர்வானந்தம் | 300 |
| S. தர்மகீர்த்தி | 500 | T. தயாகரன் | 300 |
| K. வசீகரன் | 510 | V. சுகிர்தினி | 250 |
| P. சசிதரன் | 500 | K. பாலசிங்கம் | 200 |
| S. மகேஸ்வரன் | 500 | T. அருளேஸ்வரி | 200 |
| Y. தியாகராஜா | 500 | T. அருட்செல்வம் | 200 |
| Y. மோகனசுந்தரம் | 500 | S. உதயகுமார் | 200 |
| S. நராசிவம் | 500 | N. நவமணி | 200 |
| M. விசாகலிங்கம் | 500 | N. தவமலர் | 200 |
| V. சுதாகர் | 500 | B. ஜெயகெங்கன் | 200 |
| K. இன்பதாஸன் | 500 | S. சதீஸன் | 200 |
| R. சுந்தரலிங்கம் | 500 | S. சிவசங்கர் | 100 |
| S. வீரசிங்கம் | 500 | U. நிஷாந்தி | 100 |
| N. இரதிகலா | 500 | மொத்தம் | 20960 |

| | |
|---|---|
| அச்சேற்றிய மொத்தப் பிரதிகள் | 1000 |
| ஒருபிரதிக்கு செலவாகிய உள்ளீட்டு செலவு | 19 ரூபா |
| மொத்த செலவு | 19000 ரூபா |
| கை இருப்பு | 1960 ரூபா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது
வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org